# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2016/2017 (டிசம்பர் 2019)

**TLS** 2243 தமிழில் காவியங்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – **I** இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – **II** இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. (அ) இதிகாசம், காவியம் ஆகிய இரு பேரிலக்கிய வடிவங்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை வேறுபடுத்திக்காட்டுக. (10 புள்ளிகள்)

   (ஆ) "காவியம், சார்பில் தோன்றும் (Derivative) இலக்கியமாகும்" தமிழில் தோன்றிய காவியங்களின் துணை கொண்டு இக்கூற்றைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

2. (அ) சீவக சிந்தாமணியின் அமைப்பு முறையைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   (ஆ) அக்காவியத்தின் இலக்கியச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

3. (அ) பெரியபுராணத்தின் அமைப்பு பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

   (ஆ) பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (14 புள்ளிகள்)

## பகுதி – II

4. மணிமேகலையில் ஆபுத்திரன் கதை இடம்பெறும் சந்தர்ப்பத்தினைக் குறிப்பிட்டு, அக்கதை காவிய ஆக்கத்தில் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. "பத்தினித் தெய்வத்தின் வரலாறு உரைப்பதே சிலப்பதிகாரத்தின் பிரதான நோக்கமாகும்" இளங்கோவடிகளின் எடுத்துரைப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

6. கம்பராமாயணத்தில் பிரதான பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்குமாற்றிலுள்ள கவித்துவச் சிறப்புக்களை விளக்குக. (20 புள்ளிகள்)

7. "தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணத்தைச் சீறாப்புராணம் முழுமையாகப் பின்பற்றியுள்ளது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)